**IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT AND SESSIONS COURT, RANIPET. RANIPET DISTRICT.**

**DEPOSITION OF WITNESS**

**SPL.SC.No.226/2025 - PW-4**

| | |
|---|---|
| Name | **V. Jayakumar** |
| Husband/Father Name | Venkatesan |
| Village /Area | Muppathuvetti |
| Taluk | Arcot |
| Occupation | Auto driver |
| Age | 31 |
| Religion | Hindu |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of 15.07.2026.

**முதல் விசாரணை**

நான் முப்பதுவெட்டி கிராமத்தில் வசிக்கிறேன். ஆட்டோ ஓட்டுகிறேன். என் மாமானர் பெயர் கணேசன். அவர் பெட்டி கடை வைத்துள்ளார். என் மாமியார் பெயர் லட்சுமி. என் மனைவி பெயர் அமலா.என் மனைவி அக்கா பெயர் கௌதமி, விமலா. எனக்கு இளங்கோ, மணிகண்டன், சரத்குமார் என 3 மைத்துனர்கள். இளங்கோவை மதன்குமார் என்றும் கூப்பிடுவோம். இளங்கோ எலக்ட்ரிசியன் வேலை செய்கிறார். மாந்தங்கலில் அட்டை கம்பெனியில் மணிகண்டன் வேலை செய்கிறார். ஆஜர் எதிரிகள் குஷால் என்கிற தனுஷ் மற்றும் அஸ்வின். குஷால் என் மாமானர் வீட்டில் எதிரில் வசிக்கிறார். குஷாலின் நண்பர்தான் அஸ்வின். 04.08.2025 அன்று இரவு 8 மணிக்கு என் மாமானர் பெட்டி கடை அருகில் மது அருந்துவதற்காக குஷால், அஸ்வின், பிரவீன் மூவரும் உட்கார்ந்து இருந்தார்கள். கௌதமி இதை பார்த்துவிட்டு அவர்கள் மீது

ஏற்கனவே வழக்கு உள்ளதால், கடையை உடைத்து திருடிவிடப்போகிறார்கள் என்று அவர்களை அங்கிருந்து அனுப்புவதற்காக எனது மாமனாரையும், இளங்கோவையும் அழைத்து வந்துள்ளார். இளங்கோ அவர்களை அங்கிருந்து போகச்சொன்னார்.அதற்கு குஷால் என்னையே போகச்சொல்கிறாயா, என்மேல் எத்தனை வழக்கு உள்ளது தெரியுமா, என்னை போகச்சொன்னால் உன்னை குத்திவிடுவேன் என்று சொல்லியுள்ளான். அஸ்வின் கௌதமியை பறத்தேவிடியா என்று திட்டியுள்ளான். இளங்கோவை அஸ்வின் பறத்தேடிவிடியா பையா என்று திட்டியுள்ளான். மூவருமே என் மாமனாரை அசிங்கமான வார்த்தைகளால் திட்டினார்.இளங்கோ கோபபட்டு தனுஷை கன்னத்தில் அடித்தார். கத்தியை காண்பித்து தனுஷ், இளங்கோவிடம் என்னைக்கு இருந்தாலும் என் கையில்சாவு, குத்திபோட்டுவிடுவேன் என்று மிரட்டினான். இவர்களிடம் ஏன் பிரச்சனை என்று எனது மாமனார், கௌதமி மற்றும் இளங்கோவை வீட்டிற்கு அனுப்பிவிட்டேன். அன்று இரவே மூவரும் என் மாமனார் வீட்டிற்கு போய் கத்தியை காண்பித்து மிரட்டி, அசிங்கமாக திட்டியுள்ளார்கள். எங்கள் சொந்தக்கார பொண் லாவண்யா போனில் வீடியோ எடுத்துள்ளார். எனது மாமனார் ஆற்காடு காவல் நிலையம் போய் இது குறித்து குறியுள்ளார்.அவர்கள் வந்து பார்க்கும் போது எதிரிகள் இருவரும் மற்றும் பிரவின் ஓடிவிட்டார்கள். மறுநாள் தனுஷ் வாட்ஸ்அப் ஸ்டேசஸில் 3 மதுபாட்டில் மற்றும் கத்தியை வைத்து ஸ்டேசஸ் வைத்துள்ளான். 05.08.2025 அன்று இளங்கோ மகன் அஸ்வினுக்கு பிறந்தநாள். இரவு

8 மணிக்கு என் மாமனார் வீட்டில் வைத்து கேக் வெட்டி, சாப்பிட்டுவிட்டு அவர்அவர் வீட்டிற்கு போய்விட்டோம். இளங்கோ அவர் வீட்டிற்கு வெளியில் உள்ள கொட்டகைக்கு இரவு 10 மணிக்கு தூங்கியுள்ளார். விடியற்காலை 4 மணிக்கு ஐயோ, அம்மா என்று சத்தம் கேட்டவுடன் நாங்கள் போய் பார்த்தோம். இளங்கோ இடது பக்க கழுத்து, நெற்றி ஆகிய இடங்களில் குத்தப்பட்டு இரத்த வெள்ளத்தில் கிடந்தார். எனது மாமியார் தன் பேரன் அஸ்வினியை விடியற்காலை 3.45 மணிக்கு பாத்ரும் போக வெளியே அழைத்து வந்த போது இளங்கோ இவ்வாறு குத்தப்பட்டுள்ளதை பார்த்துள்ளார். தனுஷ் மீது சந்தேகப்பட்டு லாவண்யாவும், மணிகண்டனும் பார்த்துள்ளார்கள். தனுஷ் கையில் கத்தியுடனும், பிரவின் மற்றும் அஸ்வினும் ஓடியுள்ளார்கள். தனுஷ் ஓடும் போது என் மேல் கை வைத்தான், உன் அண்ணனை குத்திவிட்டேன் என்று கத்திகொண்டே ஓடிவிட்டான். 108க்கு தகவல் சொல்லி ஆம்புலன்ஸ் வந்தது. பரிசோதித்து பார்த்துவிட்டு இளங்கோ இறந்துவிட்டதாக சொன்னார்கள். அடுக்கம்பாறை ஜி.எச்சிற்கு இளங்கோவை கொண்டு போனார்கள். பிரேத பரிசோதனை செய்து பிரேதத்தை ஒப்படைத்தார்கள். ஆஜர் எதிரிகளில் முதலில் நிற்கும் நபர் குஷால், இரண்டாவது நிற்கும் நபர் அஸ்வின் (சாட்சி சரியாக அடையாளம் காண்பிக்கிறார்). போலீசார் என்னை விசாரித்தனர்.

**குறுக்கு விசாரணை முதல் எதிரி தரப்பில் –**

நான் ஆட்டோ ஓட்டுகிறேன். **04.08. 2025** அன்று எதிரிகள் பெட்டிக்கடை அருகே மது அருந்த அமர்ந்திருந்தார்கள் என்றும், கௌதமி அவர்கள் பூட்டை உடைத்து திருட போகிறார்கள் என்று

சந்தேகப்பட்டு தன் தந்தை மற்றும் அண்ணனை அழைத்து வந்தார் என்றும், அவர்கள் எதிரிகளை போக சொன்னார்கள் என்றும் சொன்ன சம்பவத்தை நான் நேரில் பார்க்கவில்லை என்றாலும், அப்பொழுது நான் அங்கு இல்லை என்றாலும், சரியல்ல நான் அங்கு தான் இருந்தேன். தனுஷ் கத்தியை காண்பித்து என்றைக்கு இருந்தாலும் உனக்கு என் கையால் தான் சாவு என்று கூறியதாக நான் சொல்லும் சமயத்தில் நான் அந்த இடத்தில் இருந்தேனா என்றால், இருந்தேன். இந்த வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை எப்பொழுது விசாரித்து வாக்குமூலம் வாங்கினார்கள் என்றால் 6.8.2025 அன்று பிரேத விசாரணை செய்யும் பொழுது வேலூர் ஜி.எச்சில் வைத்து விசாரித்து வாக்குமூலம் வாங்கினார்கள். அதன் பிறகு எந்த வாக்கு மூலமும் வாங்கவில்லையா என்றால் வாங்கவில்லை. 04.08.2025 நடந்த சம்பவத்தை நான் நேரில் பார்த்தேன் என்பதை போலீஸ் விசாரணையில் கூறினேனா என்றால் கூறினேன். 04.08.2025 அன்று இவ்வாறு பிரச்சினையாகிவிட்டது என்று என் மனைவி எனக்கு தகவல் சொன்னாரா என்றால் இல்லை. நானே தான் அந்த சம்பவத்தை நேரில் பார்த்தேன். என் வீடு என் வீடு அதே தெருவில் உள்ளது. என்னையும் என் உறவினர்களையும் எதிரிகளையும் தவிர வேறு எவ்வளவு பேர் அங்கு இருந்தார்கள் என்றால் கூட்டமாக இருந்தார்கள் அவர்களின் பெயர் கூற முடியுமா என்றால், பார்த்திபன் மற்றும் நிறைய பேர் இருந்தார்கள், மற்றவர்கள் பெயர் எனக்கு தற்பொழுது நினைவில்லை. என் மனைவி அப்போது இல்லையா என்றால், இருந்தார். என் மாமனார் ஆற்காடு காவல் நிலையத்தில் புகார் கொடுத்து, எத்தனை மணிக்கு போலீசார் வந்தார்கள்

என்றால், இரவு 2, 3 மணி அளவில் வந்திருப்பார்கள். போலீசார் வந்த தகவலை மணிகண்டன் தான் எனக்கு மணிகண்டன் தான் சொன்னார். 04.08.2025 அன்று எத்தனை மணிக்கு பிரச்சனை ஆரம்பித்து முடிந்தது என்றால், இரவு 8 மணி அளவில் பிரச்சனை ஆரம்பித்தது ஏன் பிரச்சனை என்று என் உறவினர்களையும் அனுப்பிவிட்டு நான் வந்து விட்டேன் அப்பொழுது மணி ஒன்பது இருக்கும். விடியற்காலை கூச்சல் கேட்டு யார் யார் சென்றோம் என்றால் நானும் என் மனைவியும் சென்றோம். அப்பொழுது அங்கு எத்தனை பேர் இருந்தார்கள் என்றால் கூட்டமாக இருந்தார்கள், ஒரு 40 பேர் இருந்தார்களா என்றால் இல்லை, 20 பேர் இருந்திருப்பார்கள். இளங்கோவை யார் குத்தினார்கள் என்பதை நான் நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான். சத்தம் கேட்டு தான் நான் சென்றேன் என்றால் சரிதான். தனுஷ் கத்தியோடு ஓடியதையும் அவர் ஓடும் பொழுது என் மீது கை வைத்த உன் அண்ணனை குத்தி விட்டேன் பார் என்று சொல்லிக் கொண்டு ஓடியதையும் நான் நேரில் பார்க்கவில்லை என்றாலும், மணிகண்டன் சொல்லித்தான் எனக்கு தெரியும் என்றாலும் சரிதான். 6. 8.2025 அன்று போலீசார் எத்தனை மணிக்கு வந்தார்கள் என்றால் விடியற்காலை 5:30 மணி வாக்கில் வந்தார்கள். இளங்கோவை முதல் எதிரி குத்தவில்லை என்றாலும் எனது மைத்துனர் மணிகண்டன் முதல் எதிரிக்கு எதிராக கொடுத்த பொய் புகாருக்கு சாதகமாக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், சரியல்ல நான் 04.08.2025 நடந்ததாக சொல்லும் சம்பவ சமயத்திலும், 6/8/2025 அன்று விடியற்காலையிலும் நான் சொல்லும் இடத்தில் சொல்லும் நேரத்தில் இல்லை என்றாலும் மணிகண்டன்

அளித்த புகாருக்கு சாதகமாக அவ்வாறு பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

**குறுக்கு விசாரணை இரண்டாவது எதிரி தரப்பில் –**

2வது எதிரி ஆஜர்படுத்தப்பட்டார். 2வது எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். ஆனால், சாட்சியை குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

**மறு விசாரணை –**

இல்லை.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness and admitted by him/her to be correct.

VEERA MUTHU THENMOZHE

Principal District Judge, Ranipet
Digitally signed by VEERA MUTHU THENMOZHE
Date: 2026.07.15 17:27:36 +0530

Principal District and Sessions Judge,
Ranipet